# விபஸ்ஸனா செய்தி மடல்

## தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 3 ★ இதழ்: 9 ★ புரட்டாசி : 2024 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-


# நட்பு பலனைத் தந்தது

## புக்குசாதி பாகம் 3

குயவன் பக்கவா ஊருக்கு வெளியே ஒரு எளிய வீட்டில் வசித்து வந்தான். ஊருக்கு வெளியே அதிக களிமண் உள்ளதால், அவர் அங்கு தான் வசிப்பார். பானைகள் மற்றும் கிண்ணங்கள் செய்ய அவருக்கு நிறைய களிமண் தேவைப்படும். குயவர் தொழிலால் அவருக்கு பக்கவா என்ற பெயர் அமைந்ததா அல்லது அது அவரது இயற்பெயர் என்று நமக்கு தெரியாது. பண்டைய இலக்கியங்களில் பல பக்கவா குயவர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால், குயவர்கள் இன்று பிரஜாபதி என்று அழைக்கப்படுவதைப் போல, அக்காலத்தில் அவர்கள் அதே பெயரால் அழைக்கப்பட்டனர்.

அவருடைய உண்மையான பெயர் எதுவாக இருந்தாலும், இந்த குயவர், பக்கவா, பக்தி நிறைந்தவராகவும், பயண சாதுக்கள் மற்றும் சந்நியாசிகளுக்கு சேவை செய்வதில் ஆர்வமாகவும் இருந்ததால் மிகுந்த மரியாதைக்குரியவராக கருதப்படுகின்றார். அவரது வீட்டிற்கு அருகில், அவர் அவர்களுக்காக ஒரு ஓய்வு இல்லத்தை கட்டினார்; அது கும்பகார ஓய்விடம் (குயவர் வீடு) என்று அழைக்கப்பட்டது. இந்த ஓய்வு இல்லத்தில், துறவிகள் மற்றும் சந்நியாசிகள் ஒரிரு நாட்கள் தங்கலாம். சில நேரங்களில், புத்தர், ஸாரிபுத்திரர் மற்றும் பிற பிக்குகள் அங்கே இரவைக் கழிப்பார்கள். சாவத்தியில் புத்தரைப் பார்க்க புக்குசாதி இராஜகஹத்தை விட்டுத் திரும்ப முடிவு செய்த அன்று, புத்தர், அந்தி சாய்ந்த பிறகு, புக்குசாதி தங்கியிருந்த இந்த வீட்டிற்கு வந்து, “பக்கவா, நான் இன்று இரவு உங்கள் விருந்தினர் மாளிகையில் தங்கலாமா? அது உனக்குச் சுமையாக இருக்குமா?” என்று கேட்டார்.

“இல்லை ஐயனே! அது எனக்கு பெரிய புண்ணியமாக அமையும். ஆனால் நான் இங்கு இன்னொரு தனிமனிதனை தங்க அனுமதித்துவிட்டேன். நீங்கள் அவரிடம் கேளுங்கள், அவருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், பகவான் இங்கேயே தங்கலாம்.

கும்பகார ஓய்விடத்திற்குள் நுழைந்த பகவான், கிழிந்த ஆடைகளுடன் அமர்ந்திருந்த ஒரு துறவியைக் கண்டார். பளிச்சென்ற நிறமும், பெரிய மூக்கும், பெரிய கண்களும், அகன்ற நெற்றியும் உடையவராக திகழ்ந்தார். அவர் சக்திவாய்ந்த கைகள், கால்கள் மற்றும் அகண்டமார்புடன்கூடியஒருபோர்வீரரின் கட்டமைப்பைக் கொண்டிருந்தார். பகவான் அவரைக் கண்டதும், “துறவியே, இன்றிரவு நான் இங்கே தங்கலாமா? அது தங்களுக்கு சுமையாக இருக்குமா?” என்று கேட்டார். அதற்கு அவர், “நண்பரே நீங்கள் நீண்ட காலம் வாழ்வீர்களாக;

எனக்கு அது ஒரு பாரமாக இருக்காது. கும்பகார ஓய்விடத்தின் இந்த மண்டபம் போதுமான அளவு பெரியதாகும். இங்கே நீங்கள் மகிழ்ச்சியாக இரவைக் கழிக்கலாம். உட்கார்ந்து தியானம் செய்ய மட்டுமே எனக்கு போதுமான இடம் தேவை. நீங்கள் இங்கு வசதியாக தங்கலாம்" என்றார்.

புத்தர் தம்முடைய இடத்தில் சிறிது புல் பரப்பி தியானத்தில் ஆழ்ந்தார். முன்னாள் மன்னர் புக்குசாதியும் தியானம் செய்யத் தொடங்கினார். விரைவில் நான்காவது ஆழ்நிலை சமாதியை அடைந்தார்.

இரவின் முதல் பகுதி, இரண்டாவது மற்றும்மூன்றாவது பகுதியும்கடந்துவிட்டது. பௌர்ணமியாக இருந்ததால் வானம் பிரகாசமாகி, திறந்திருந்த ஜன்னல்கள் வழியாக அறைக்குள் நிலவொளி வந்து கொண்டிருந்தது. பகவான் மீதும் துறவி மீதும் வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது. பகவானின் முகம் இயற்கையாகவே அறிவொளியால் பிரகாசமாக இருந்தது; அந்தத் துறவியின் முகமும் ஆழ்நிலை தியானத்தால் பிரகாசமாக இருந்தது. நிலவின் வெளிச்சம் அவர்கள் முகத்தில் பிரகாசத்தை அதிகரித்தது. துறவி நீண்ட நேரம் அசைவின்றி (அதிட்டான) அமர்ந்திருந்தார். இரவின் மூன்றாம் பகுதியில், துறவி கண்களைத் திறந்தார். பகவான் அவரைப்பார்த்து புன்னகைத்தார். அவர், "துறவியே, நீங்கள் யாருடைய கீழ் துறவறம் பெற்றீர்கள்? உங்கள் ஆசிரியர் யார்? யாருடைய போதனையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அந்தத் துறவி, "நண்பரே, சாக்கிய குலத்தின் மகனான, சாக்கியரான, கோதமர் இருக்கின்றார். அவருடைய புகழ் எங்கும் பரவி, அந்த பகவானின் மீதுள்ள சிரத்தையால் நான் துறந்தவன் ஆனேன். அந்த பகவான் தான் என்னுடைய ஆசிரியர். அந்த பகவானின் போதனையை தான் நான் அங்கீகரிக்கிறேன்.

அப்போது பகவான், "துறவியே, நீங்கள் எப்போதாவது உங்கள் ஆசிரியரைப் பார்த்துள்ளீர்களா? நீங்கள் அவரைப் பார்த்தால், அவரை அடையாளம் காண முடியுமா? என்று கேட்டார்.

"இல்லை, மதிப்பிற்குரிய ஐயனே, நான் அவரைப் பார்த்ததில்லை, ஆதலால், என்னால் அவரை அடையாளம் காண இயலாது."

"உங்கள் ஆசிரியர் இப்போது எங்கே இருக்கின்றார்?"

"நான் இங்கு வந்தபோது, அவர் ஜேதவன துறவில்லத்தில் தங்கியிருப்பதாக அறிந்தேன். மகதத்தில் ஞானம் அடைந்ததால், அவர் மகதத்தில் இருப்பார் என்று நான் நினைத்தேன். இப்போது அவரைச் சந்திக்க, நான் சாவத்திக்குத் திரும்ப வேண்டும்."

இந்த துறவி வாழ்வதற்கு சிறிது காலம் மட்டுமே உள்ளது என்பதை பகவான் தனது சக்தியால் உணர்ந்தார். அவர் விடியற்காலையில் இறந்துவிடுவார். விபஸ்ஸனா பயிற்சியை இப்போதே அவருக்குக் கற்பித்தால், முற்பிறப்பு புண்ணியங்களால் அவர் முழுமையான விடுதலையை அடைய முடியும். இரக்கத்தால் நிறைந்த பகவான்,துறவியிடம், "கவனமாக கேளுங்கள்! நான் தங்களுக்கு தம்மம் என்ற விலைமதிப்பற்ற வரத்தை தருகிறேன்" என்றார். பகவானின் கருணை நிறைந்த வார்த்தைகள் அந்தத் துறவியை ஊக்குவித்தது. "நிச்சயமாக, நண்பரே" என்றார். பிறகு, ஒருமுகப்பட்ட மனதுடன், அவர் பகவானின் அறிவுரைகளைக் கேட்கத் தொடங்கினார்.

மன்னர் பிம்பிசாரரால் அனுப்பப்பட்ட தங்கத் தட்டில் ஆனாபான பயிற்சியைப் பற்றிப் படித்த பிறகு, புக்குசாதி, கடந்தகால வாழ்க்கையின் புண்ணியங்களின் காரணமாக, ஆழ்நிலை சமாதியின் நான்காவது நிலையை எளிதாக அடைந்தார். இப்போது பகவான் புத்தர், பஞ்ச பூதங்கள் மற்றும் விஞ்ஞான அதாவது அறிதல் பற்றிய (தாது விபங்க) விளக்கத்தின் மூலம் விபஸ்ஸனாவின் ஆழத்திற்கு அவரை வழிநடத்தினார்.

நிலம், நெருப்பு, நீர், காற்று மற்றும் ஆகாயம் - இந்த ஐந்தும் உடல் கூறுகள் மற்றும் அறிதல் (விஞ்ஞான) மன உறுப்பு. இந்த ஆறும் சேர்ந்து ஒரு மனிதனை உருவாக்குகின்றன. இந்த ஆறு கூறுகளைப்

பிரித்து அவற்றின் தம்ம இயல்பை அனுபவ நிலையில் அறிவது தாது விபங்கமாகும்.

இதைத் தவிர, கண்கள், காதுகள், மூக்கு போன்ற ஆறு புலன் உறுப்புகளும், அவற்றின் ஆறு புலப் பொருட்களும் (காட்சிப் பொருட்கள், ஒலிகள், நாற்றங்கள் போன்றவை) மற்றும் 18 வகையான உணர்வுகள் உள்ளன - சுகமானது, சுகமல்லாதது மற்றும் சுகமுமில்லாத துக்கமுமல்லாத உணர்வுகள். இந்த உணர்வுகள் நிலையற்றவை, தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது என்னும் இயல்பைக் காண்பதன் மூலம், விபஸ்ஸனாவின் பகுப்பாய்வு பயிற்சியின் மூலம், நான், எனது, மற்றும் என்னுடையது என்ற மாயையிலிருந்து வெளிவரலாம்.

தாது விபங்க (உடல்-மனக் கூற்றுகள் பற்றிய பகுப்பாய்வு) பற்றிய இந்த சொற்பொழிவின் நான்கு முக்கிய குறிக்கோள்கள் என்னவெனில்: (1) புலன்களின் உலகில் உள்ள எல்லாவற்றின் நிலையற்ற தன்மையையும் தொடர்ந்து உணர்ந்து ஞானத்தை வளர்ப்பது (2) புலன்களுக்கு அப்பாற்பட்ட நித்திய தன்மையை அனுபவிப்பதன் மூலம் உண்மையை அறிவது (3) வேட்கை, வெறுப்பு, அறியாமை ஆகியவற்றைப் போக்குவதன் மூலம் துறவை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் (4) மன மாசுகளிலிருந்து விடுபட்டு மன அமைதியில் நிலைபெறுதல்.

பயிற்சியின் நுட்பமான அம்சங்களை பகவான் விளக்கிக் கொண்டிருந்ததால், புக்குசாதி உலகியல் (லோகிய) தியானத்திலிருந்து முன்னேறி, உலகிற்கு (லோகுத்தர) அப்பாற்பட்ட தியான நிலையை அடைந்தார். அவரது சமாதி ஆழ்ந்த ஒருமிப்பு நிலைகளில் மட்டும் கட்டுப்பட்டு இருக்கவில்லை. விபஸ்ஸனாவின் பயிற்சியால், கீழான லோகங்களின் அனைத்து அசுத்தங்களையும் அழிக்க முடிந்தது. அவர் ஸோதாபன்ன என்றழைக்கப்படும் முக்தியின் முதல் நிலையை (நிப்பான) அடைந்தார்; பின்னர் முக்தியின் அடுத்த பலன் நிலையான சகடாகாமி நிலையையும் அடைந்தார்.

வளிமண்டலத்தைஒரேநேரத்தில்மெத்த-தாது (அன்பின் அதிர்வலைகள்), தம்மதாது மற்றும் நிப்பானதாது ஆகியவற்றால் நிரப்பியபடி பகவான் புத்தர் தனது போதனையைத் தொடர்ந்தார். புக்குசாதி கேட்பது மட்டுமல்ல, விபஸ்ஸனா பயிற்சியின் மூலம், உள்ளே ஆழமாக ஊடுருவி, மீதமுள்ள அசுத்தங்களை அகற்றினார்.

சந்திரன் தனது வெள்ளி கதிர்களுடன் மேற்கு அடிவானத்தில் அமர்ந்து கொண்டிருந்தது. பிரகாசிக்கும் சூரியன் தனது சிதறிய தங்கக் கதிர்களுடன் கிழக்கு அடிவானத்தில் உதித்துக்கொண்டிருந்தது. இந்த நேரத்தில், புக்குசாதி, கருணைகொண்ட பகவானின் அதிர்வுகளிலிருந்து வலிமையைப் பெற்று, விபஸ்ஸனாவின் நுட்பமான நிலைகளின் ஆழத்திற்குச் சென்று கொண்டிருந்தார். திடீரென்று, நான்காவது ஆழ்நிலை சமாதியுடன், நிரோத-ஸமாபத்தியை அடைந்ததன் மூலம் அனாகாமி நிலையின் நிப்பான அனுபவத்தை அவர் அனுபவித்தார்.

இதைப் பெற்றபோது, அவர் நன்றியுணர்வுடன் நிறைந்தார். இத்தகைய முன்மாதிரியான முக்திக்கான விபஸ்ஸனா போதனையை புத்தபெருமானைத் தவிர வேறு யாராலும் போதிக்க முடியாது. நிச்சயமாக, இந்த மாமனிதரே புத்தராவார். இந்த எண்ணம் அவரது மனதில் தோன்றியபோது, அவரிடமிருந்து இந்த உயர்வான வார்த்தைகள் வெளிவந்தன.

“ஓ! நான் என் குருவான ஸம்மா ஸம்புத்தரைக் கண்டுபிடித்துவிட்டேன்.”

இந்த வார்த்தைகளை உச்சரித்து, புக்குசாதி புத்தரின் பாதங்களில் மரியாதை செலுத்தினார். பின்னர், வலது தோள்பட்டையை விட்டுவிட்டு, மேல் ஆடையை இடது தோளில் வைத்து, கூப்பிய கைகளுடன், “வணக்கத்திற்குரிய பகவானே, நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டேன். எனது முட்டாள்தனத்தாலும் அறியாமையாலும் நான் உங்களை அடையாளம் காணவில்லை, உங்களை ‘நண்பன்’ என்று அழைத்தேன். பகவானே, இந்த மீறலுக்கு என்னை மன்னியுங்கள்.

எதிர்காலத்தில் நான் அப்படி ஒரு செயலைச் செய்யமாட்டேன்." என்று கூறினார்.

"பிக்கு, நீங்கள் அறியாமையால் செய்த விதிமீறலை ஏற்றுக்கொண்டீர்கள். நீங்கள் அதற்கான பரிகாரம் செய்துள்ளீர்கள். தவறு செய்து, அதை ஏற்றுக்கொண்டு, திருத்தம் செய்து, எதிர்காலத்தில் அதை மீண்டும் செய்யக்கூடாது என்று உறுதியளிக்கும் ஒருவர், தர்மத்தின் ஒழுக்க விதியை (துறவிகளுக்கான நடத்தை நெறிமுறை) பின்பற்றுகிறார். இது முன்னேற்றத்தின் அடையாளம்" என்றார்.

"பகவானே! உங்களிடமிருந்து துறவறம் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

"பிக்குவே, உங்களிடம் முழுமையான ஆடைகள் மற்றும் பிட்சை பாத்திரம் உள்ளதா?"

"அவை என்னிடம் இல்லை, மதிப்பிற்குரியவரே."

"பிக்கு, ஒரு ததாகதர் முழுமையடையாத சீவர ஆடைகள் மற்றும் பிட்சை பாத்திரம் இல்லாத ஒருவருக்கு துறவறம் வழங்குவதில்லை."

புத்தரின் வார்த்தையை வரவேற்று, புக்குசாதி தன் இருக்கையை விட்டு எழுந்து, பகவானுக்கு வணக்கம் செலுத்தி, அவரை வலம் வந்து, சீவர ஆடையையும் பிட்சை பாத்திரத்தையும் தேடி நகருக்குச் சென்றார்.

விடியற்காலையில், நகர வாயில்கள் திறக்கப்பட்டன. ஏராளமான மக்களும் பிக்குகளும் அந்த வழியாக வந்தபோது, பக்கவா என்னும் குயவனின் விருந்தினர் மாளிகையில் எதிர்பாராத விதமாக புத்த பகவான் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர். அவர்களில் சிலர் அரசன் பிம்பிசாரிடம் தெரிவிக்க விரைந்தனர். அவர் விரைவில் அங்கு வந்து மகதத்தில் பகவானை வணங்கினார்.

அங்கிகளையும் பிட்சை பாத்திரத்தையும் தேடிச் சென்ற பிக்கு விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டதாகச் செய்தி வந்தது. காந்தார மன்னன் இவனே என்று புத்தர் தெளிவுபடுத்தினார். அவர் தனது நண்பரான பிம்பிசாரரிடமிருந்து தம்மத்தின் செய்தியைப் பெற்று, அரச வாழ்க்கையைத் துறந்து, மகத நாட்டிற்கு துறவறம் ஏற்க பயணம் செய்தார். புக்குசாதி ஒரு தம்மத்தின் பார்வை கொண்டவர், அவர் தம்மத்தைப் புரிந்து கொள்ள விரும்பினார். தூலமான நிலையில் இருந்து நுட்பமான யதார்த்தத்திற்கு முன்னேறிய அவர் தூய தர்மத்தின் போதனைகளைக் கேட்டதால் விடுதலை அடைந்தார். அவர் மனதில் கடினத்தன்மை இல்லை, எந்த கண்ணோட்டத்திலும் அவர் பிடிவாதமாக இருக்கவில்லை; அதனால் அவரால் தம்மத்தை எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. இரவு நேரத்தில், விபஸ்ஸனாவின் பயிற்சியின் மூலம், அவர் கீழ் லோகங்களின் அனைத்து அசுத்தங்களையும் அகற்றினார். இதன் விளைவாக, அவர் இப்போது பிரம்மலோகத்தில் பிறந்து, அங்கு விபஸ்ஸனா பயிற்சியின் மூலம் அரஹந்த்(முழு விடுதலை நிலை) பலனைப் பெற்று, பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியில் இருந்து விடுபடுவார்.

பிம்பிசாரர் முதலில் தனது நண்பரின் மரணத்தால் துக்கமடைந்தார்; ஆனால் அவரது நண்பர் அனாகாமி என்னும் புனித நிலையை அடைந்தார் என்பதை அறிந்தபோது, அவர் தனது செய்தி மிகவும் பொருத்தமான நபருக்கு தெரிவிக்கப்பட்டதையும், விபஸ்ஸனா பயிற்சியுடனும் பகவானுடனும் அவர் தொடர்புகொண்டது மிகுந்த பலனை அளித்தது என்பதை உணர்ந்தார்.

பகவானிடமிருந்து தகவலைக் கேட்ட பிம்பிசாரர் மகிழ்ச்சியடைந்து, கைகூப்பி அவரை வணங்கி, "சாது, சாது, சாது" என்றார்.

உண்மையாகவே, புக்குசாதியுடன் அவரது தம்ம நட்பு பெரும் பலனைத் தந்தது. அவரது நண்பர் அளவற்ற பலன் அடைந்தார்.

இதேபோல் அனைவரும் பயனடையட்டும்.

*கல்யாண – மித்ரன்,*

**எஸ். என். கோயங்கா**